# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

## பன்னாட்டுக் கருத்தரங்கம்


**இலொயோலா**

**கலை & அறிவியல் கல்லூரி,**

தேசியத் தர மதிப்பீட்டுக் குழுமத்தால் (NAAC) முதல் சுற்றில்
'B' தரச் சான்று பெற்றது.
UCG சட்டம் – 1956 பிரிவு 2 [f] இன் கீழ் அங்கீகரிக்கப்பட்டது.
[சேலம் பெரியார் பல்கலைக்கழக இணைவு பெற்றது]
மெட்டாலா, இராசிபுரம் வட்டம், நாமக்கல் மாவட்டம் – 636 202

**தமிழ்த்துறை**



**அருள் பதிப்பகம்**

வேப்பமரத்துக்குளம் பேருந்து நிறுத்தம்,
வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அருகில்,
கரூர் முதன்மைச் சாலை, ஈரோடு.

**தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்**

**Tamil Ilakiyankalil Valviyal Sinthanaikal**

முதல் பதிப்பு : **மார்ச் 2026**

**அருள் பதிப்பகம்**

வேப்பமரத்துக்குளம் பேருந்து நிறுத்தம்,

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அருகில்,

கரூர் முதன்மைச் சாலை, ஈரோடு.

வடிவமைப்பு : **சிவம் கிராபிக்ஸ், கோவை**

பக்கங்கள் : 328

**ISSN NO : 2320-222X**

46

# மலர்வதி புதினங்களில் மகளிர் வாழ்வியல்

**முனைவர் வெ.சிவசங்கர்**
*பேராசிரியர் - தலைவர், தமிழ்த்துறை*
*வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,*
*பல்லாவரம், சென்னை - 600 117*

## முன்னுரை

நவீன இலக்கிய வரிசையில் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக நாவல் இலக்கியம் தனக்கென தனித்த இடத்தைப் பெற்றுள்ளது. நாவலில் இடம்பெறும் கருத்தாடல்களின் வழி பல்வேறு வகையான கோட்பாடுகளின் அடிப்படையில் நாவல் இலக்கியம் ஆய்வு செய்யப்படுகின்றது. அந்த வகையில் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த மலர்வதி என்னும் எழுத்தாளர் தூப்புக்காரி, காத்திருந்த கருப்பாயி, ஆட்டுக்குட்டி ஆகிய மூன்று புதினங்களை எழுதியுள்ளார். இம் மூன்று புதினங்களிலும் மகளிர் வாழ்வியல் பற்றிய மிகுதியான கருத்துக்கள் பேசப்படுகின்றன. மகளிர் வாழ்வியலைப் பற்றி அறிவதற்காகச் சில சான்றுகளைக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுகிறது.

## கதை மாந்தர்களும் கதை நிலையும்

மலர்வதியின் புதினங்களில் பல்வேறு கதைமாந்தர்கள் உள்ளனர். அவர்கள் காட்டு குட்டி நாவலில் ரமணி, தூப்புக்காரி நாவலில் கனகம், காத்திருந்த கருப்பாயி நாவலில் சுந்தரி ஆகிய மூன்று கதாபாத்திரங்களைச் சான்றாக வைத்து மகளிர் வாழ்வியல் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பிறக்கும் மனிதன் யாரும் தீயவராகப் பிறப்பதில்லை. அவர்கள் வாழ்கின்ற சூழல்தான் தீயவராக மாற்றுகிறது. காட்டுக்குட்டி நாவலில் வரும் ரமணியை அவளின் தாய்

சிறப்பாகவே வளர்க்கின்றார். ஆறு மாத கருவை அழிக்க முடியாமல் காட்டுக்குட்டியைப் பெற்றெடுக்க வேண்டிய நிலைக்கு ஆளானார் ரமணி. இச்சமூகம் அவளின் வாழ்வியல் நிலையைக் கருத்தில் கொள்ளாது அவள் வாழும் முறையை மட்டும் தாழ்த்திப் பேசி, பெண் என்னும் இழி பொருளாக வைத்து மட்டுமே பார்த்தது. அவர்களுக்கு அந்தக் கதாபாத்திரம் விடை அளிப்பதாக, ரமணி தன் வறுமை நிலையையும் வாழ்வியல் நிலையையும் தாழ்த்தி பேசும் சமூகத்திற்கு சாட்டையடி கொடுக்கிறார்.

வாழ்க்கை என்னும் சிறையில் சிறைப்பட்ட ரமணி போன்ற சீதைகள் இருக்கத்தான் செய்கிறார்கள் என்ற பெண்களின் வாழ்வியல் சமூக நிலையை அறியமுடிகிறது எனலாம்.

''ஆடவர் மூலமாக ஏற்படும் சிக்கலை வெல்ல பெண்களுக்கு மன உறுதியும் தெளிவும் தேவை'' (ராஜம் கிருஷ்ணன் நாவல்களில் பெண் கதைமாந்தர்கள், ப.211) என்ற சிதம்பர சுப்பிரமணியன் அவர்களின் கூற்றுக்கு ஏற்ப ஆண்கள் வலிமை மிக்கவர்கள் என்பதும் அவர்களை எதிர்த்து நிற்க பெண்களுக்கு உடலிலும் மனதிலும் தைரியமும் தெளிவும் தேவை என்பதையும் அறியலாம்.

அடுத்ததாகத் தூப்புக்காரி புதினத்தில் முதன்மை கதாபாத் திரமாக சித்தரிக்கப்பட்டிருக்கும் கனகத்தின் வாழ்க்கைப் போராட் டத்தை நாவல் ஆசிரியர் மிகவும் எதார்த்தமாக வெளிப்படுத்தி யுள்ளார்.

கல்லுவிளைப் பகுதியில் அமைந்துள்ள மருத்துவமனையில் துப்புரவுத் தொழிலாளியாக வேலை செய்பவள். விரும்பி இந்தத் தொழிலுக்கு வந்தவர் அல்ல. கணவனை இழந்த நிலையில் தன்னுடைய ஒரு மகளை வளர்ப்பதற்காகவும் தன் வறுமை நிலையைப் போக்கிக் கொள்ளவும் இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தாள்.

**''தன் ரத்தத்தையே உணவாக**
**தன் இரத்தத்தையே உடையாக**
**தன் இரத்தத்துக்குள் உறைவிடமாக**
**அளிக்கிறாள் அன்னை!**
**இதுதானே இரத்தப் பந்தம்!**
**கொடி உறவில் வளர்ந்ததால்**

**எவருக்கு எதிராகவும்**

**கொடி தூக்குகிறது பிள்ளை!**

**தாய்க்கு ஆதரவாக! (பாரதி கவிதை, வசன கவிதை, ப.19)**

என்ற பாரதி வரிகளுக்கு ஏற்ப தன் குழந்தைக்காக மிகவும் சகிப்புத் தன்மையுடன் துப்புரவுத் தொழிலைச் செய்யத் தொடங்கினாள் கனகம்.

''அங்க எம்புடு நேரம் தூத்துக்கிட்டு நிப்ப ய இங்க மேல மாடி வந்து கக்கூசு கழுவனும் ஒங்கூட உள்ள றோஸ்சிலி எங்க போனா'' (தூப்புக்காரி, ப.21) என்று அதிகாரத் தோரணையில் கனகத்தை அழைக்கின்றாள். அவர் அதிகாரி. இதிலிருந்தே கனகம் செய்யும் தொழிலின் நிலைமை வெளிப்படுகின்றது.

**''அவளின் கூந்தலில்**

**பூவைப் பறித்தது**

**சமூகம்!**

**நட்சத்திரப் பூக்களை**

**தலையின் மேல் சூட்டியது**

**வானம்! (சிறைப்பட்டே கிடக்கும் சீதைகள், ப.96)**

இவ்வாறு பெண்ணின் நிலை கண்டு இயற்கை கூட இரக்கம் கொள்கிறது. ஆனால் இச்சமூகமோ எதார்த்தமான நிலையில் கூட கணவனை இழந்த பெண்களுக்காக இரக்கப் படுவதில்லை என்பது மேற்கண்ட வரிகளின் மூலம் புலனாகிறது. உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லை என்றாலும், கணவனை இழந்த பிறகு தன் மகளை வளர்க்க துப்புரவுத் தொழிலைத் தேர்ந்தெடுத்த கனகத்தை அவளின் உறவினர்கள் மிகவும் கடுமையாகவும் கேவலமாகவும் திட்டி தீர்த்தனர். இவ்வாறு கனகத்தின் வாழ்க்கை நிலையின் யதார்த்தத்தை மையமாகக் கொண்டு நாவல் நகர்கிறது.

காத்திருந்த கருப்பாயி என்னும் நாவல் கருமை நிறம் கொண்ட சுந்தரி என்னும் கதாபாத்திரத்தை மையமாக வைத்தே நகர்கிறது என்பதனால் அச்சுந்தரியின் வாழ்வியல் சூழலைப் பின்வருமாறு காண்போம்.

பாறைத்தொழில் செய்யும் தர்மருக்கு மனைவி இல்லை. இளைய மகள் சுதா பிறந்தபோது சன்னி வந்து இறந்து விட்டாள். இவருக்கு இரண்டு மகள்கள் மூத்தவள் பெயர் சுந்தரி. அவள்

## வாழ்வியல் சிக்கலும் தீர்வும்

பொதுவாகப் பெண்ணைப் பற்றி பேசுகையில் உலகில் உள்ள பல்வேறு பொருட்களுக்கு உவமையாக ஒப்பிட்டுச் சொல்கின்றோம் என்பதற்கு பின்வரும் வரிகள் சிறந்த சான்றாகிறது.

**''நாட்டை தாய்நாடு என்போம்**
**நதிக்குப் பெண்ணின் பெயரை வைப்போம்!**
**நிலத்தை நிலமகள் என்போம்**
**நீதியை தேவதை என்போம்**
**வான்மதியைப் பெண் என்போம்**
**பெண்ணை பொன்னி என்போம்**
**தாயும் பெண்ணேதான்**
**தாரமும் பெண்ணேதான்**
**தங்கையும் பெண்ணேதான்**

**- (முனைவர் மாணிக்கம்மாள் பிச்சை, புதிய தென்றல், பக்.87-88)**

ஆனால் உண்மையான நிதர்சனம் அதற்கு எதிர்மறையாக உள்ளது என்பது உண்மை. பெண்களைப் போற்றுவதற்குப் பதிலாக அவர்களைச் சிலர் விமர்சன வட்டத்துள் சிக்கித் தவிக்க வைக்கின்றனர் என்பதே உண்மை.

**''மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல**
**மாதவம் செய்திடல் வேண்டுமம்மா''**

**- (கவிமணி, பல்வகைப் பாடல்கள், முரசு வரிகள், 3-4)**

மேற்கண்ட வரிகளில் பெண்ணாய்ப் பிறப்பதற்குப் பெரிய தவம் செய்திருக்க வேண்டும் என்பது பொருளாகும். ஆனால் மலர் வதியின் புதினங்களில் குறிப்பாக விளிம்பு நிலையில் வாழும் கீழ்தட்டு குடும்பத்தைச் சார்ந்த பெண் கதாபாத்திரங்களின் சித்தரிப்பு மிகவும் கவலைக்கிடமாகவே நம் கண்முன் தோன்றுகிறது. காலங்காலமாக ஆணைவிடப் பெண் என்கின்ற ஒற்றைச் சொல்லினைப் பொருத்தே இவர்கள் சிக்கலுக்கு ஆளாகின்றனர். குடும்ப வறுமை என்பது ஒரு பெண்ணை எந்த நிலைக்கும் தள்ளும் என்பதற்குச் சான்றாக காட்டுக்குட்டி நாவலில் உள்ள ரமணி என்னும் கதாபாத்திரம் மிகச் சிறந்த சான்றாகும். எனவே, வறுமையில் இருந்து பெண்கள் மீண்டெழுவது வாழ்வியல்

சிக்கலாகவே உள்ளது. எனவே, இத்தகைய சிக்கல்களையும், அதன் தீர்வுகளையும் இந்நாவல் முன்வைக்கின்ற கருத்தாக இருக்கிறது. எனவே, இதற்கான தீர்வுகள் கண்டிப்பாக கிடைக்க வேண்டும்.

**முடிவுரை**

இக்கட்டுரையின் வாயிலாக இச்சமுதாயத்தில் உள்ள சில சிக்கல்கள் மட்டுமே சான்றாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. வறுமையின் காரணமாகப் பெண்களின் வாழ்வியல் சிக்கல்களும் அதனால் ஏற்படும் விளைவுகளும். மற்றொன்று பெண்கள் யதார்த்த வாழ்க்கை வாழ முடியாமை என்று சுட்டிக்காட்டுகின்றது. அத்தகைய நிலையிலிருந்து மீள வேண்டும் என்கிற ஒரு தன்மையையும் வெளிப்படுத்துகிறது எனலாம். எனவே மகளிர் வாழ்வியல் என்பது போற்றுதலுக்கு உரியதாக அமைந்தாலும் கவிதைகளிலும் இலக்கியத்திலும் வாழ்வியலிலும் பெண்ணைப் புனைப் பொருளாக வைத்துச் சமூகம் பார்க்கிறது. அதனைத் தாண்டிய யதார்த்த வாழ்வியலை மகளிர் வாழ வேண்டும். அதற்கான விழிப்புணர்வு ஏற்படவேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

------